
# நிஜங்கள்



பார்த்திபன்

வெளியீடு : 1

கதைகள்

- நிஜங்கள்
- குற்றமில்லாத கொலைகள்
- ஒரே ஒரு ஊரிலே
- உயரப் பறக்கும் பறவைகள்

ஓவியம் : ரமணி

என்னுடைய பக்கங்கள்.......

வணக்கம். நிஜங்கள் மூலம் சந்தித்துக் கொள்கிறோம். பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. அவைகளை சரியான நேரத்தில் சரியான முறையில் பயன்படுத்தாமல் விடுவோமேயானால் அது மாபெரும் தவறாகும். இலக்கியம் காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பதால் அது வெளிவரும் காலகட்டத்தின், சூழ்நிலையின் தாக்கங்கள் எழுத்துகளாக வருவது தவிர்க்க முடியாததும், தவிர்க்க கூடாததும் ஆகும். எமது பாரம்பரிய பிரதேசங்களில் தினம் தினம் இழப்புகள். நாளை இருக்கப் போகிறவர்களின் நலன்களுக்காக இன்று பலி இடப்படும் உயிர்கள். சந்தர்ப்ப வசத்தாலும், வசதிகளாலும் நாம் இங்கே வந்து விட்டாலும் நமது பிரச்சனைகளிலிருந்து எம்மை விலக்கிக் கொள்ளக் கூடாது. எம்மாலான பங்களிப்புகளை நிச்சயம் செய்தே ஆக வேண்டும். அந்த வகையில் எழுத்துகளை நான் தேர்ந்தெடுத்துள்ளேன். பொழுது போக்குக்காக மாயாஜாலக் கதைகளும், காதல்கதைகளும் எழுதப்பட்டு, படிக்க வேண்டிய வேளை இதுவல்ல. எம்முடைய ஒவ்வொரு செய்கையும் எங்களுடன் சேர்ந்த மற்றவர்களுக்கும் பயனளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த தொகுப்பில் உள்ளவற்றை வெறும் கதைகளாகப் படித்து விட்டு மூடி வைக்காமல் நிஜங்களைப் புரிந்து கொண்டு நன்மை தரும் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டால் அதுவே இந்த வெளியீட்டுக்குக் கிடைத்த மிகப் பெரிய இலாபம். முகப்பு, ஓவியங்கள் வரைந்து தந்த, கிறுக்கல்களை கையெழுத்து அமைப்பாக்கித் தந்த நண்பர்களுக்கு என் நன்றிகள்.

இனி ஜனனத்தில் சந்திப்போம்.

—பார்த்திபன்
03.1986.


Contact Address:
SÜD ASIEN BÜRO
Kiefernstr 45
5600 Wuppertal 2
West Germany
Tel:(0202)507156

# நிஜங்கள்

தீபாவளிப் பட்டாசுகள் போல் வெடிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. எரிந்து கொண்டிருக்கும் வீடுகள், கடைகளிலிருந்து வெளிக் கிளம்பும் புகை சூழலை கருமையாக்கிக் கொண்டிருந்தது. அவல ஓலங்கள் தாளம் தப்பி வந்து கொண்டிருந்தன.

எல்லோருமே பரபரப்பாயிருந்தார்கள். அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். உயிரைக் காப்பாற்றும் ஆசை யாருக்கில்லை? மக்களிடையே ஆங்காங்கு நின்ற காக்கி உடைகள் தமிழர்களின் விதியை நிர்ணயித்துக் கொண்டிருந்தன.

தோமஸின் குடிசையும் சூழ்நிலைக்கேற்ப மாறியிருந்தது.

திரேசா கைக்குழந்தையை பாயிலிருந்து பாய்ந்தெடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டாள்.

சிணுங்கியபடி இன்னொரு மகள் ஓடி வந்து தாயின் சேலை முனையை பிடித்துக் கொண்டாள்.

தோமஸ் மற்ற இரண்டு பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு வெளியே ஓடி வந்தான்.

தூரத்தில் வெடிச் சத்தங்களுடன் காக்கி உடைகள் வந்து கொண்டிருந்தன.

"திரேசா ஓடி வா" தோமஸ் பரபரத்தான்.

திரேசா கைக் குழந்தையுடன் ஓடிவர, பின்னால் சிறுமி சேலையைப் பிடித்தபடி இழுபட்டுக் கொண்டு வந்தாள்.

"ஓடு, எல்லோரும் ஓடுங்கோ . அவங்கள் வாறாங்கள்"

தோமஸ் கத்தியபடி திரேசாவுக்கு பக்கத்தில் நின்ற சிறுமியைத் தூக்கிக் கொண்டான்.

எல்லோரும் ஓடத் தொடங்கினார்கள். இடையிடையே சனங்கள் கூச்சல் போட்டபடி கலந்து ஓடினார்கள்.

"நாங்க எங்கேப்பா போறோம்?"

சிறுவன் கேட்ட கேள்விக்கு யாரும் பதில் சொல்லவில்லை.

"எனக்கு பயம்மாயிருக்கம்மா" என்றழுதான் மற்றவன்.

அந்த ஊர் தனது பிரசைகளையும், உடமைகளையும் இழந்து கொண்டிருந்தது.

நீண்ட தூரம் ஓடி எல்லோரும் தம்மை ஆசுவாசப் படுத்திக் கொண்டபோது அவர்கள் நின்ற இடம் காட்டுப் பகுதியாகும்.

சுற்றிலும் மரங்கள்.

தாம் பாதுகாப்பான இடத்துக்கு வந்து சேர்ந்ததாக நினைத்துக் கொண்ட பின் எல்லோரும் தத்தமது இழப்புகளை சொல்லி அழத் தொடங்கினார்கள்.

"என்ரை புருசனைக் கொண்டிட் டாங்க"

"பச்சைப் புள்ளையை சுட்டிட்டாங்களே"

"எல்லாமே போச்சு"

தனது குடும்ப அங்கத்தினரை எண்ணிப் பார்த்த தோமஸ் திடுக்கிட்டாள். இரண்டாவது மகனைக் காணவில்லை.

"அன்ரன், அன்ரன்" கத்தினான். அங்குமிங்கும் ஓடினான். தேடினான்.

திரேசா ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள். மற்றப் பிள்ளைகள் மிரண்டு போய் அழுது கொண்டிருந்தார்கள்.

காட்டைக் கரிய இருள் அப்பத் தொடங்கியது.

எவருமே வெளிச்சமாக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. அழுது புலம்பியவர்கள் சக்தியற்று அப்படியே நிலத்தில் விழுந்து கிடந்தார்கள்.

திரேசா மடியில் குழந்தையைப் படுத்தி வைத்தபடி மரமொன்றில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். மற்ற இரண்டு பிள்ளைகளும் பக்கத்தில் படுத்திருந்தன.

தோமஸ் பிள்ளையைத் தேடிப் போயிருந்தான். இன்னமும் வரவில்லை.

திரேசா கலக்கத்துடன் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்ணீர் கன்னத்தில் காய்ந்து போயிருந்தது.

இராப் பறவைகள், மிருகங்களின் சத்தங்கள் நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டிருந்தன.

கட்டில், பாய் என்று வித்தியாசப் பட்டுப் படுத்தவர்கள் அந்த இரவை சமமான முறையில் அநுபவித்துக் கொண்டிருந்தவர்.

சூரியக் கதிர்கள் மரங்களினூடாக நிலத்தை முத்தமிட முயற்சித்துக் கொண்டிருக்கையில் காட்டுக்குள்ளிருந்த மக்கள் பழையபடி பரபரப்பாயிருந்தார்கள். தத்தமது மன உணர்ச்சிகளை வாய் வழியாக வெளியிட்டுக் கொண்டனர்.

"பிள்ளையைக் காணேல"

"புருசன்ரை உடம்பை அவது விட்டுட்டுப் போனுங்களோ?"

"தம்பி தப்பிச்சாரோ?"

திரேசா பிள்ளையைத் தேடிப் போன தோமஸை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

யாருக்குமே காட்டை விட்டு வெளியே போகத் துணிவில்லை. எல்லோரும் எதிர்பார்ப்பில் இருந்தார்கள்.

முடிவாக இரண்டு ஆண்கள் துணிந்து காட்டை விட்டு வெளியே போனுர்கள். மற்றவர்கள் துடிப்போடு காத்திருந்தார்கள்.

ஒவ்வொரு விநாடியும் நீளமாகக் கடந்து கொண்டிருந்தது.

எல்லோருமே நிலை கொள்ளாதிருந்தார்கள்.

"அங்க வருகினம்" யாரோ கத்தினுர்கள்.

எல்லோரும் ஒரே திசையை நோக்கினுர்கள்.

போன இருவரும் இரண்டு பேரை சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு வந்தவர்.

கொண்டு வரப்பட்டவர்கள் யாரெனப் பார்க்க எல்லோரும் ஆசைப்பட்டார்கள். அவசரப்பட்டார்கள்.

அவர்களிருவரும் தரை மீது கிடத்தப்பட்டனர். ஒருவனின் தோளிலிருந்து குருதி வடிந்து உறைந்து போயிருந்தது. மற்றவனின் நெற்றியில் இரத்தத்தாலான தவாரம் வந்திருந்தது. இருவரும் முனகியபடி இருந்தனர்.

"இவன் சரோசாவின்ரை புருசன் சண்முகமல்லோ?"

"சரோசா குண்டடிபட்டு செத்துப் போனாள்.பாவம் பிள்ளைத்தாச்சிமனுசி"

"ஆ....என்ரை தம்பி சிறி..."

ஒரு பெண் அழுதபடி ஓடிவந்து தோளில் காயம் பட்டவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

எல்லோர் கண்களும் கலங்கின.

"டிரக்குகள் ஓடித்திரியுது"

"நாங்கள் பயத்தில ஓடி வந்திட்டோம்"

ஊருக்குப் போனவர்கள் மாறி மாறி சொல்லிக் கொண்டிருந்தனர்.

"என்ரை புருசனைக் கண்டியளோ?" திரேசா பயத்துடன் கேட்டாள்.

"ஆரு? தோமஸ் தானே? பிள்ளையோட கிடக்கான்.ரண்டு பேருக்குமே உசிரில்லை."

திரேசா கதறி அழத்தொடங்கினாள்.

மற்றவர்களும் தமக்கு வேண்டியவர்களை விசாரிக்க ஊருக்குப் போனவர்கள் இறந்தவர்கள் பட்டியலை நீளமாக்கிக் கொண்டிருந்தார்கள்.

வரவர அழுகை ஒலி பெரிதாக்கிக் கொண்டிருந்தது.நேரமும் போய்க் கொண்டிருந்தது.

பிள்ளைகள் எல்லாம் பசியை வாய்விட்டு சொல்லி அழுதன.பெரியவர்கள் வாயையும்,மனதையும் கட்டுப்படுத்த முயற்சி செய்து கொண்டிருந்தனர்.சிலர் கொதித்துக் கொண்டிருந்தார்கள்.

திடீரென காட்டின் மேலே இயந்திரங்களின் சத்தம் கேட்டது.

"கெலிக்கொப்ரர்கள் பறக்குது"சிறுவன் ஒருவன் கத்தினான்.

"சாப்பாட்டுப் பொட்டலங்கள் போடத்தான் வருகுது" இன்னொரு சிறுவன் சந்தோசப்பட்டான்.

அவர்களுடைய ஆவலை நீடிக்க விடாமல் 'கெலிக்கொப்ரர்கள்'வந்த நோக்கத்தைச் செயல்படுத்த தொடங்கின.

பலத்த சத்தத்துடன் காட்டுக்குள் அங்காங்கே குண்டுகள் வெடித்துச் சித-றின.

எல்லோரும் பயத்துடன் கலைந்து ஓடினார்கள்.

ஆகாயத்திலிருந்து தொடர்ந்து குண்டுமாரி பொழியப்பட்டுக் கொண்டிருந்தது. மரங்கள் தீப்பிடித்து எரியத் தொடங்கின. எதிரியுடன் நடாத்தும் யுத்தம் போல் நிராயுதபாணிகளான, அகதிகளான, அப்பாவி ஜனங்கள் மீது வன்மம் தீர்க்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அரச இயந்திரங்கள் நீண்ட நேரத்தின் பின் அந்த இடத்தை விட்டு அகன்று போது காட்டுக்குள் பெரிய கூட்டம் எதுவும் இல்லை.

சிதைந்த உடல்கள் மண்ணோடு மண்ணாகியிருந்தன. சிலர் குருதி வெள்ளத்தில் முனகியபடி இருந்தனர். தீப்பிடித்த மரங்களிலிருந்து புகை கிளம்பியபடி இருந்தது.

திரேசாவுக்கு தான் எங்கே நிற்கிறோம் என்ற குறிப்பே தெரியவில்லை. குழந்தை மார்போடு அணைக்கப்பட்டிருந்தது. மற்ற இரண்டு பிள்ளைகளும் உடல் நடுங்க கத்தவும் திராணியில்லாமல் தாயை ஒட்டியபடி நின்று கொண்டிருந்தன.

இனி எங்கே போவது?

என்ன செய்வது?

எல்லாமே கேள்விக்குறியாக இருந்தது.

அவசர கால நிலமையின் கீழ் தோமஸின் படகு பறிமுதல் செய்யப்பட்ட-போது அவர்கள் தொழிலை இழந்தார்கள். வீட்டுச் சாமான்களை விற்று முடிந்த பின் கடனிலும், கருணையிலும் உயிரை உடம்போடு ஒட்ட வைத்துக் கொண்டிருந்தார்-கள்.

நேற்றோடு குடிசையும் போனது. கணவனும் போய் விட்டான். ஒரு பிள்ளைகூட போய் விட்டது.

இன்னும் என்ன இழப்புகள் ஏற்படும்?

திரேசாவைப் போல புருசனை இழந்தவர்கள், சகோதரரை இழந்தவர்கள் பெற்றோரை இழந்தவர்கள், பிள்ளைகளைப் பறி கொடுத்தவர்கள்.......... இவர்களுக்கு ஆறுதல்?

உடமைகளையும், உயிர்களையும் கண் முன்னாலேயே பறி கொடுக்கும் பயங்கரம். தஞ்சம் அடைந்து உயிரைத் தப்ப வைக்கக்கூட வழியில்லையா?

திரேசா கீழே உட்கார்ந்திருந்தாள். குழந்தை தாயிடம் பால் வரம் கேட்டுக் கொண்டிருந்தது. மற்ற இரண்டு பிள்ளைகளும் சுருண்டு படுத்திருந்தன.

சுற்றிலும் மரங்களை தவிர வேறெதுவுமில்லை.

துயரத்தைபகிர்ந்து கொள்ள எந்த ஜீவனுமில்லை. எல்லோருக்கும் அவரவர் உயிரே நிச்சயமில்லாதிருக்கையில் மற்றவரைக் கவனிக்கவா போகிறார்கள்?

பொழுது போய்க் கொண்டிருந்தது.

அவர்கள் இருந்த இடத்தில் இரவுக்கும், பகலுக்கும் அதிக வித்தியாசம் இருக்கவில்லை.

துளிகளாக ஆரம்பித்து மழை அதிகரிக்கத் தொடங்கியது. அவர்கள் எவரும் அதனைச் சட்டை செய்யவில்லை.



"எழும்புங்கோ,எழும்புங்கோ"சத்தத்துடன் ஆளை எழுப்ப திரேசா கண்களை திறந்தாள்.

"எழும்புங்கோ,பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு வாங்கோ"

திரேசாவுக்கு எல்லாமே மெல்லமாகத்தான் கேட்டது.முன்னால் நிற்பவர்களையும் சரியாக அடையாளம் காண முடியவில்லை.

யாரோ தொட்டெழுப்பினார்கள்.தோள்களைப் பிடித்துக் கூட்டிக் கொண்டு போனார்கள்.

அவளுக்கு நடக்கவே சிரமமாக இருந்தது.மார்பை இறுக்கிப் பார்த்தாள். குழந்தை கழுத்தை இறுக்கி கட்டிப் பிடித்தபடி இருந்தது.மற்ற பிள்ளைகளை யாரோ இருவர் தூக்கி வருவது மங்கலாகத் தெரிந்தது.

நீண்ட தூரம் நடந்து காட்டுக்குள்ளால் வெளியே வந்ததும் கண்கள் வெளிச்சத்துக்கு கூசின.

பாதையில் நின்ற உழவு இயந்திரப் பெட்டி ஒன்றில் ஏறச் சொன்னார்கள். எல்லோரும் ஏறியதும் பயணம் தொடங்கியது.

பாடசாலை ஒன்றின் முன் வாகனம் நிற்பாட்டப்பட்டது.எல்லோரையும் இறங்கச் சொன்னார்கள்.

பாடசாலை முன்பாக வெளியில் கொடி கட்டப்பட்டு பல வண்ண உடுப்புகள் காயப் போடப்பட்டிருந்தன.உள்ளே ஒரே ஆரவாரமாக இருந்தது.

திரேசாவையும்,பிள்ளைகளையும் உள்ளே அழைத்துப் போனார்கள்.

அது பாடசாலையின் வகுப்பறை ஒன்று.பெண்கள் கூடுதலாகவும்,குழந்தைகள்,வயோதிபர்கள் குறைவாகவுமிருந்தனர்.

திரேசாவும்,பிள்ளைகளும் அந்த இடத்தில் விடப்பட்டு சில நிமிடங்களின் பின் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தட்டில் கஞ்சி வந்தது.

சில விநாடிகளிலேயே அவர்கள் அவ்வளவையும் தீர்த்து விட்டனர்.பிள்ளைகள் ஏக்கத்துடன் தாயைப் பார்த்தன.

"இந்த தட்டுகள் உங்களுக்குத்தான்.பேணியளும் பிறகு தருவோம்.வடிவா வைச்சு நீங்கள் பாவிக்க வேணும்"

ஒரு இளைஞன் சொல்லிவிட்டுப் போனான்.

கொஞ்ச நேரத்துக்குள்ளேயே திரேசாவும் பிள்ளைகளும் அங்கு முன்பே வந்தவர்களுடன் ஐக்கியமாகிப் போனார்கள்.

இழப்புகள் பற்றிய துக்கங்கள் பரிமாறப்பட்டன. பிள்ளைகள் 'கெலிக்கொப்ரர்'குண்டு போட்டதை பெரிய கதை போல் மற்றப் பிள்ளைகளுக்கு விபரித்துக் கொண்டிருந்தார்கள்.

இருந்தவர்கள், இல்லாதவர்கள் எல்லோரும் ஒன்று கூடி இருந்த அந்தப் பாடசாலைக்கு 'அகதி முகாம்'என்ற பெயர் ஏற்பட்டிருந்தது.

இரு வேளையும் கஞ்சி குடித்தார்கள். கப்பி வந்து விழும் சோற்றைச் சாப்பிட்டார்கள். சில நாட்களில் மட்டும் வேறு மாப்பொருள் சாப்பாடு கிடைத்தது.

போட்டிருந்த உடுப்புகளை பாடசாலைக் கிணற்றின் உதவியுடன் தோய்த்து பாவித்தார்கள்.

அவர்கள் எல்லோரினதும் வாழ்க்கையும் அகதி முகாம் என்ற வட்டத்துக்குள் குறுகலாகிப் போனது.

பிள்ளைகள் வயதுக்கேற்ற துடிப்புகள் அடங்கி ஏக்கத்துடன் இருந்தன. குழந்தைகள் தாய் பாலுக்காக தவம் செய்தன.

சில நாட்களில் வாந்திபேதி பரவத் தொடங்கியது. குழந்தைகளின் எண்ணிக்கை குறையத் தொடங்குகையில் ஒரே ஒரு மருத்துவர் வந்தார்.

மருத்துவம் நடந்து கொண்டிருக்கையிலேயே இன்னும் கொஞ்சப் பேர் மரணித்தனர்.

கஸ்டங்களுக்கு எல்லோரும் பழகிப் போனார்கள். தற்போதைய வாழ்க்கைக்கேற்ப தம்மை பழக்கப் படுத்திக் கொண்டார்கள்.

பாடசாலை வேலிக்குள்ளிருந்து வெளி உலகைப் பார்த்தார்கள். நாளைய பொழுதைப் பற்றிக் கவலைப்படாது, சினிமா பார்க்கும், அரட்டை அடிக்கும் பந்து விளையாடும் மனிசர்களைப் பார்த்து பரிதாபப் பட்டார்கள்.

'அவர்களில் எத்தனை பேர்தான் தப்பித்து இந்த மாதிரி இடங்களுக்கு வருவார்களோ?'

ஒரு நாள் திரேசாவின் குழந்தை கையில் கிழிந்த பத்திரிகைத் துண்டுடன் வந்தான். திரேசா அதனை வாங்கிப் பார்த்தாள்.

'.....வெளி நாடுகளில் அகதிகளாக வந்திருப்பவர்களை திருப்பி அனுப்புங்கள். அவர்களுக்கு நாங்கள் பாதுகாப்பளிக்கின்றோம்........'

மேற்கண்டவாறு ஜனாதிபதி வெளியிட்ட அறிக்கை இருந்தது. திரேசாவுக்கு அந்த நேரத்திலும் சிரிப்பு வந்தது.

"வெளி நாடுகளுக்கும் அகதிகள் போயிருக்கிறார்களா?" சிறுவன் கேட்டான்.

திரேசா பதில் சொல்லவில்லை.

"அவர்கள் எல்லாரும் காசிருந்ததால் அகதிகள்" அகதி முகாம் இளைஞன் ஒருவன் சொன்னான்.

சிறுவனுக்கு உண்மையில் யார் அகதிகள் என்று புரியவில்லை.

# குற்றமில்லாத கொலைகள்

மணியொலியைத் தொடர்ந்து பாடசாலையிலிருந்து வெளி வந்த மாணவர்கள் பாதையில் பரவினர்.

எங்கும் ஒரே வெண்மை. வெளித் தோற்றத்தில் எந்த வித பாகுபாடும் இல்லாமல் மாணவர்கள் என்ற முத்திரையில் எல்லோரும் சமமாக இருந்தார்கள். எட்டு மணித்தியாலங்களாக சிறைப்பட்டு இருந்ததைப் போல் ஆரவாரித்துச் சந்தோசித்தார்கள்.

வாகனங்கள் தமது வேகத்தைக் குறைத்து மெதுவாக நகர்ந்து போக வேண்டியதாயிற்று. பொறுமை இல்லாத சாரதிகள் வெளியே எட்டிப்பார்த்து கத்தினார்கள். அந்த கூட்டத்தில் தமது பிள்ளைகள் இல்லை என்ற தைரியத்தில் சிலர் முரட்டுத்தனமாக வாகனத்தைச் செலுத்தினர்.

மனோகரியும், சங்கரியும் அருகருகாக நடந்து வந்தனர். சகோதரிகள்தான் என்றாலும் தலை முடியிலிருந்து இருவரிடையேயும் வித்தியாசம் இருந்தது.

"மனோகரி இண்டைக்கு சாப்பாடு எப்படி?" சங்கரி கேட்டாள்.

"பறவாயில்லையே" மனோகரி சுருக்கமாகப் பதிலளித்தாள்.

"பறவாயில்லையா? நெடுகு பாண்தான் சாப்பாடா? எனக்கு மற்றவையோட இருந்து சாப்பிடவே வெட்கமாயிருக்கு"

"அப்ப இனிமேல் சாப்பிடாதை"

"பகிடியே? மற்றவையைப் பாக்கிறேலயே? எப்பிடி எப்பிடி சாப்பாடு கொண்டு வாறாங்கள் என்டு"

"பாத்திருக்கிறேனே. வீட்டுக் கஸ்டத்திலே சாப்பாடு கொண்டு வர ஏலாமல், அதை வெளிப்படுத்தவும் முடியாமல் கிறவுண்ட்ஸில போய் நிண்டு விளையாடுறவர்களையும் பாத்திருக்கிறன்"

மனோகரியின் இந்த பதிலுக்குப் பின் சங்கரி எதுவும் சொல்லவில்லை.

அவரவர் தம் வீடுகளுக்குச் செல்ல மாணவரின் கூட்டம் குறைந்து நான்கைந்து பேரே நடந்து கொண்டிருந்தார்கள்.

சூரியன் வேலை நேரம் முடிந்து மேற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். அவன் வெற்றுடம்பாய் கடலில் நீராடப் போகும் காட்சியை நினைத்து பார்த்து வானம் வெட்கிச் சிவந்தது.

மனோகரியும், சங்கரியும் மௌனமாக வீட்டில் நுழைந்து பாடப்புத்தகங்களை வைத்து விட்டு, உடையை மாற்றி, முகம் கழுவிக் கொண்டு கூடத்தில் வந்து உட்கார்ந்தனர்.

பார்வதி-அம்மா-இருவருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் புறப்படத் தயாரானாள்.

"இரவுக்குப் புட்டு அவிக்கலாம். எல்லாம் செய்து வையுங்கோ. நான் போட்டு வாறன்."

பார்வதி சொல்லி விட்டு கையில் சில புத்தகங்களுடன் வெளியே போனாள்.

பார்வதி இரவு நேரங்களில் சின்னப் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துக் கொஞ்சம் சம்பாதித்தாள். அந்த உழைப்புடன் அவளுடைய ஓய்வூதிய பணமும் சேர்ந்துதான் அந்த குடும்பத்தின் தேவைகளை நிவர்த்தி செய்ய முயன்று கொண்டிருந்தது.

பார்வதியின் கணவன் கொழும்பில் மருந்து விற்பனைக் கடை வைத்திருந்தான். இனக் கலவரத்தின் போது அகால மரணமாகி விட்டான்.

கொலைஞர்களின் இந்தச் செயலால் அந்தக் குடும்பம் ஆண் துணையை இழந்தது.

மத்தியதரக் குடும்பத்துக்கு கொஞ்சம் கீழாகவும் ஏழைக் குடும்பத்துக்கு கொஞ்சம் மேலாகவும் பொருளாதார வசதிகள் இருந்தாலும் தனது இரண்டு பெண்களையும் படிக்க வைப்பதில் தீவிரமாக முயன்று கொண்டிருந்தாள் பார்வதி.

பிள்ளைகளும் சிரத்தையாகப் படித்தார்கள்.

மனோகரி உயர்தர வகுப்பிலும், சங்கரி பத்தாம் வகுப்பிலுமாக படித்துக் கொண்டிருந்தார்கள். இருவருமே படிப்பில் கெட்டிக்காரர்கள்.

மனோகரி கஸ்டத்தை உணர்ந்தவள். சங்கரி கொஞ்சம் விளையாட்டுத்தனம்.

அழகில் இருவருமே அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தனர்.

"நீ புட்டு அவி. எனக்கு எழுத்து வேலை கொஞ்சம் இருக்கு" சங்கரி சொல்லிக் கொண்டே தனது அறைக்குள் புகுந்து கொண்டாள்.

தங்கை நழுவுவதை புரிந்து கொண்டாலும் அவளைத் தொந்தரவு செய்யாமல் தானே சமையல் செய்யத் தொடங்கினாள் மனோகரி.

•௵•

அந்த வகுப்பறையில் ஆசிரியர் இல்லாமல் மாணவர்கள் மட்டுமே இருந்தார்கள். ஆசிரியர் அன்று பாடசாலைக்கே வரவில்லை. மாணவர்கள் சந்தித்தவாறு வெவ்வேறு கவனங்களில் இருந்தார்கள்.

சிலர் மாணவிகளைக் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தனர். சிலர் பாடப்புத்தகங்களுக்குள் கதைப் புத்தகங்கள் வைத்துப் படித்தார்கள். சினிமா நடிக, நடிகயரை விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள். சிலர் உண்மையாகவே பாடத்தைப் படித்தார்கள்.

"என்னடா? அங்கேயே பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" ராகவன் நாதனின் தோளில் தட்டிக் கேட்டான்.

"ஒன்றுமில்லை" சுருக்கமாகச் சொன்ன நாதன்கொஞ்ச நேரத்துக்குப் பிறகு தானாகவே சொன்னான்.

"மனோகரி நல்ல வடிவு"

"ஓகோ கதை அப்படிப் போகுதோ?"

ராகவன் பக்கத்தில் உள்ளவர்களுக்கும் விசயத்தைச் சொல்ல மற்றவர்களும் பெரிய நகைச்சுவையைக் கேட்டது போல் சிரித்தார்கள்.

நாதனின் தந்தை யாழ்ப்பாணத்தில் பெரிய புடவைக் கடை வைத்திருந்தார். நாதன் ஒரே மகன். செல்லமாக வளர்ப்பதாக நினைத்து மகன் கெட்டுப் போக தாராளமாக அவர் வாய்ப்பளித்தார். அவருக்கிருப்பது போலவே நாதனின் நாகரிக செலவினங்களை எதிர்பார்த்து அவனுக்குப் பெரிய கூட்டமே இருந்தது.

திருட்டுத்தனமாக சிகரெட் குடிப்பார்கள். பகலின் பக்கத்தில் நின்று கள்ளை குடித்தார்கள். துவிச்சக்கர வண்டியில் ஊர்வலமே வருவார்கள். பெண்களுடன் சேட்டை விடுவார்கள்.

"இப்பிடிச் சத்தம் போட்டால் இஞ்சால படிப்பிக்கேலாது"

பக்கத்து வகுப்பாசிரியர் வந்து சொன்னதும் அந்த வகுப்பில் அமைதி நிலவியது.

எல்லோரும் புத்தகங்களை எடுத்து கடமைக்காகவோ, சும்மாவோ விரித்து வைத்தார்கள்.

நாதனின் கண்கள் மட்டும் அடிக்கடி மஞ்சுளாவின் மேல் பதிந்து கொண்டிருந்தது.

•∾•

இருள் அப்போது தான் பரவத் தொடங்கியது. இரண்டொரு தெரு விளக்குகள் மட்டும் மத்தமது கடமைகளைச் செய்து கொண்டிருந்தன.

பஸ் ஒன்று நின்று போக வேலை முடிந்து வந்தவர்கள் அதிலிருந்து இறங்கி நடந்தார்கள்.

மஞ்சுளா சாமான்களை வாங்கிக் கொண்டு கடையிலிருந்து வெளியே வந்தாள்.

பார்வதி 'ரியூசனுக்கு' போயிருந்தாள். மஞ்சுளா இனித்தான் போய் சமையல் செய்ய வேண்டும். அத்துடன் பாடங்களுக்கான எழுத்து வேலைகள் அவளுக்கு நிறைய இருந்தன.

பாதையில் அவ்வளவாக நடமாட்டம் இல்லை. மஞ்சுளா வேகமாக நடந்து கொண்டிருந்தாள்.

திடீரென்று பின்னாலிருந்து சத்தம் கேட்டது.

மஞ்சுளா திரும்பிப் பார்த்தாள். இவள் திரும்பியதும் ஒற்றைக் காலைத் தரையில் ஊன்றிக் கொண்டு 'சைக்கிளிலிருந்த' நாதன் பற்கள் யாவற்றையும் காட்டிச் சிரித்தான்.

மஞ்சுளா எதுவும் பேசாமல் தொடர்ந்து நடந்தாள்.

கொஞ்சத் தூரம் சென்றதும் மீண்டும் அருகாக சத்தம் கேட்டது.

மஞ்சுளா திரும்பினாள்.

கையில் ஒரு காகித துண்டை நீட்டியபடி நாதன் நின்றான்.

"என்ன இது?" மஞேகரி சந்தேகத்துடன் கேட்டாள்.

"படிச்சுப் பாருங்கோ. புரியும்"நாதன் சிரிப்போடு சொன்னதும் மஞேகரி-க்குப் படிக்காமலேயே புரிந்து விட்டது.

தலையை வெடுக்கென்று திருப்பிக் கொண்டு வேகமாக நடந்தாள் மஞேகரி.

தொடர்ந்தும் பின்னால் சத்தம் கேட்டாலும் அவள் திரும்பிப் பார்க்கவேயில்லை

படபடப்புடன் வீட்டு வாசற் கதவுவரை வந்து கதவை தட்டிவிட்டு திரும்பி பார்த்த போது தூரத்தில் பாதையோரமாக நாதன் துவிச்சக்கர வண்டியுடன் நிற்பது தெரிந்தது.

•ஒ•

வரிசையாக வாசிகசாலையிலிருந்து புறப்பட்டு வகுப்பறைக்கு எல்லோரும் வந்தார்கள்.

அந்தப் பாட நேரத்துக்குரிய ஆசிரியர் வந்ததும் எழுந்து நின்று மரியாதை வணக்கம் செலுத்திவிட்டு அமர்ந்தார்கள்.

மஞேகரி அந்தப் பாடத்துக்கான கொப்பியை எடுத்து விரித்த போது உள்-ளேயிருந்த காகிதத் துண்டு ஒன்று கண்ணில் பட்டது.

வியப்போடு அதை எடுத்து விரித்துப் பார்த்தாள்.

'நான் உன்னைக் காதலிக்கிறேன்'

இந்த வசனத்தைக் குறிக்கும் ஆங்கில பதச் சொற்கள் எழுதப்பட்டு நாதன் என்று கையொப்பமிடப்பட்டிருந்தது.

மஞேகரிக்கு குப்பென்று வியர்த்தது. கோபத்தால் முகம் சிவந்தது.

'அவனுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேணும்'

கடிதத்தை யாரேனும் பார்த்து விடுவார்களோ' என்ற பயத்தில் அதைக் கிழிக்காமல் இன்னொரு கொப்பிக்குள் வைத்தாள்.

பல்லைக் கடித்துக் கொண்டே தலையைத் திருப்பிப் பார்த்தாள்.

நாதன் தலையைக் குனிந்து கொண்டே ஓரக் கண்ணால் இவளைப் பார்ப்பது தெரிந்தது.

மஞ்சுகரி எதுவும் செய்ய முடியாமல் பாடத்தைக் கவனித்தாள்.

இவளுடைய செய்கைகளை பக்கத்துக் கதிரையிலிருந்த ராணி கவனித்துக் கொண்டிருந்தாள்.

ஆசிரியர் தான் நடாத்திய பாடத்தில் கேள்விகள் கொடுத்தார். விடைகளை எழுதிக் கொண்டு வந்து தனக்கு காட்டும்படி பணித்தார்.

எல்லோரும் அதில் சிரத்தையாக இருந்தார்கள்.

மஞ்சுகரி ஏனோதானோ என்று பதில்களை எழுதி எழுந்து போய் ஆசிரியருக்கு காண்பித்தாள்.

இந்த நேரத்தில் ராணி மஞ்சுகரியின் கொப்பியைத் திறந்து அதற்குள்ளிருந்த கடிதத்தை எடுத்துப் படித்து விட்டு அப்படியே வைத்து விட்டாள்.

மஞ்சுகரி மீண்டும் வந்து இருக்கையில் அமர்ந்தாள். அவள் மனம் படபடத்துக் கொண்டிருந்தது.

மதிய போசன இடைவேளையின்போது அருகே யாரும் இல்லாத வேளையில் கடிதத்தைக் கிழித்தெறிந்தாள். அதன்பின்தான் அவள் நிம்மதியடைந்தாள்.

•ෙ•

"படம் எப்படி?" சங்கரி கேட்டாள்.

மஞ்சுகரியும் அவளும் பக்கத்து வீட்டில், 'வீடியோவில்' 'தவம்' படம் பார்த்து விட்டு வந்து கொண்டிருந்தார்கள்.

"எனக்குப் பிடிக்கேல" மஞ்சுகரி பதிலளித்தாள்.

"ஏன்? கெடுக்கப்பட்ட கதாநாயகி எப்படி ஆண்வர்க்கத்தைச் சாடுகிறாள்? எப்படியெல்லாம் அவர்களைப் பழி வாங்குகின்றாள். அதிலையும் ரொப். இதுவரை எந்தப் படத்திலும் இப்படி வரவேயில்லை."

"படத்தின்ரை ஆரம்பமே எனக்கு பிடிக்கேல. காதல் என்டதே வெறும் அழகுணர்ச்சியில் வாறதுதான். அந்தந்த வயதுகளுக்குரிய கோளாறுகளும் இதில் சேர்-

ந்து கொள்கின்றன. அவசரமா ஏற்படுற காதலில எல்லாமே அவசரமா நடந்து முடிந்து விடும். முடிவு சோகம் தான்."

"அப்ப பெற்றார் நடாத்தி வைக்கிற கலியாணம்தான் உண்மையானது, சிறந்தது என்டு சொல்லுறியா?"

"அப்பிடியில்லை. அப்பிடிப்பட்ட திருமணங்களிலும் குறையள் இருக்கலாம். ஆனா பெரும்பாலான காதல் வெறும் உடல் கவர்ச்சியே ஒழிய மனமொத்ததல்ல."

"அப்ப ராமன் சீதை காதல் எல்லாம் வெறும் கவர்ச்சியினால் வந்ததுதானோ?"

"இதுக்கு என்னால் மறுமொழி சொல்லேலாது. கதைக்கிறதுக்கு இதைவிட வேற விசயமே இல்லையா? பேசாமல் வா" மஞ்சுளா முடித்து வைத்தாள்.

இருவரும் வீட்டுக்குள் சென்றனர்.

பார்வதி பாட சம்பந்தமான வினாவிடைகள் தயாரித்துக் கொண்டிருந்தாள்.

சகோதரிகள் இருவரும் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டனர்.

படுத்திருக்கையில் சங்கரி மீண்டும் ஆரம்பித்தாள்.

"அந்தப் படத்தில் கதாநாயகி பல ஆம்பிளைகளால் வஞ்சிக்கப்பட்டாலும் தன் மகனை பெரியவனாக வளர்க்க வேண்டுமே என்ற வெறியில் தன்ரை உடம்பையே விக்கிறாளே. பரிதாபம்"

"இதில என்ன பரிதாபம்? அப்பிடிப்பட்ட தொழிலால் வரும் காசில் பிள்ளையை வளர்ப்பதை விட இருவரும் நஞ்சு குடித்து செத்திருக்கலாம்" பார்வதி தான் சொன்னாள்.

பட விமர்சனங்கள் தொடர்ந்து கொண்டிருக்கையில் நிலவு மேகத்துக்குள் மறைந்து கொண்டிருந்தது.

·ஒ·

இளம் வெயில் பரவியிருந்தது. பறவைகள் கீச்சிட்டுப் பறந்தன.
அன்றைய அலுவல்களை கவனிக்க எல்லோரும் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள்
மஞ்சுளா சீக்கிரமே பாடசாலைக்கு வந்து விட்டாள். அவளுடைய வகுப்பறையில் வேறெவரும் வந்திருக்கவில்லை.

மற்றைய வகுப்பறைகளில் ஐந்தாறு பேர்களே இருந்தார்கள்.

பாடசாலை ஆரம்பிக்க முப்பது நிமிடங்கள் இருந்தன.

மஞேகரி தனது வகுப்பறையை சுத்தம் செய்தாள். கதிரை, மேசைகளை ஒழுங்கு படுத்தினுள்.

கொப்பி ஒன்றை எடுத்து படிக்க நினைக்கையில் நாதன் வகுப்பறைக்கு வந்தான்.

மஞேகரி அவனைக் கவனியாதவள் போல் கொப்பியை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள்.

நாதன் அவளை நோக்கியே வந்தான்.

"என்ரை கடிதம் படிச்சனீங்களே?"

". . . . . . . . . . . . "

"பதிலே தரேலயே?"

". . . . . . . . . . ."

"சரியான வெட்கம் போல"

"சீ. பள்ளிக்கூடத்தில இருக்கேக்க மாணவன் மாதிரி இருக்கப் பார். இனியும் என்னேட தேவையில்லாமல் கதைக்காதை"
மஞேகரி படபடவென கொட்டித் தீர்த்தாள்.

நாதன் ஆத்திரத்துடன் எதுவும் பேசாமல் திரும்பி நடக்கையில் ராணி வகுப்பறைக்குள் வந்து கொண்டிருந்தாள்.

கர்த்தால், பகிஷ்கரிப்பு காரணமாக பாடசாலை மூடப்பட்டிருந்ததால் மஞேகரியும், சங்கரியும் வீட்டிலேயே இருந்தார்கள்.

மஞேகரி பார்வதிக்கு சமையலில் உதவி செய்துகொண்டிருக்க சங்கரி வீட்டை சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

"என்னை முடிஞ்சு போச்சம்மா" மஞேகரி வெறும் போத்திலை எடுத்துக் காட்டினுள்.

"அடடா. இப்ப சமையலுக்கு வேணுமே? கர்த்தாலுக்காண்டி கடையளும் பூட்டி இருப்பாங்கள்." பார்வதி அலுத்துக் கொண்டாள்.

"சந்திக் கடை ஒற்றைக் கதவில திறந்திருக்கும்"சங்கரி முன் வாசலில் நின்று குரல் கொடுத்தாள்.

"மனோகரி நீ போய் வேண்டிக்கொண்டு வா.நான் சோறு வடிச்சு போடு-றன்."பார்வதி சொல்லிக்கொண்டே சோற்றவிளை எடுத்துப் பதம் பார்த்தாள்.

மனோகரி உடையை மாற்றி போத்தலையும், காசையும் எடுத்துக் கொண்டு சந்திக் கடைக்குப் புறப்பட்டாள்.

மத்தியான வெயில் சுட்டெரித்தது.பாதையில் நடமாட்டம் குறைவாக இரு-ந்தது.

பாடசாலை மூடப்பட்டிருந்ததால் சிறுவர்கள் பந்தடித்தும், மாபிளடித்தும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

மனோகரி எண்ணெயை வாங்கிக் கொண்டு கடையிலிருந்து வருகையில் சந்தியில் நாதன் நண்பர்களுடன் நிற்பது தெரிந்தது.

ஆட்கள் நிற்பதால் அவன் எந்த தொல்லையும் செய்ய மாட்டான் என்ற துணிவுடன் மனோகரி நடந்தாள்.

சிறிது தூரம் நடந்ததும் ஏதோ சந்தேகத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

நாதன் அவளுக்குப் பின்னால் துவிச்சக்கரவண்டியில் மெதுவாக வந்து கொண்-டிருந்தான்.

தூரத்தில் அவன் நண்பர்கள் நின்று பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

மனோகரி அவமானத்துடன் வேகமாக நடந்தாள்.இடையில் இரண்டொருவர் தென்படுகையில் தலையைக் குனிந்து கொண்டாள்.

கோபத்தால் அவள் உடல் வெப்பமாகியது. இன்று எப்படியும் இதை அம்மா-விடம் சொல்லிவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

மத்தியானச் சாப்பாடு முடிந்ததும் மனோகரி விசயத்தை வெளியிட்டாள்.

"இவங்களுக்கெல்லாம் பள்ளிக்கூடம் ஒரு கேடா?"பார்வதி திட்டினாள்.

"செருப்பைக் கழட்டி அடிக்க வேணும்"சங்கரி பொரிந்தாள்.

பார்வதி மகளுக்கு சமாதானம் சொல்லி துணிவுண்டாக்கினாலும் மனதுக்குள் பயந்தாள்.


மஞ்சரி காலையில் பாடசாலைக்குப் போவதற்கு முன்பே நாதனின் நண்பர்களினால் 'நாதன் மஞ்சரி காதல்'காவியமாக விபரிக்கப்பட்டிருந்தது.

ராணியும் தான் 'பார்த்தவற்றைக்'கொண்டு மெருகூட்டினாள்.

மஞ்சரி வகுப்பறைக்குள் நுழைந்ததுமே கேலிகள், கிண்டல்கள் ஆரம்பமாயின. ஜாடையாகவும், நேரிடையாகவும் குத்தலாகப் பேசினார்கள்.

மஞ்சரிக்கு அழுகை வந்தாலும் அடக்கிக் கொண்டாள்.

பாடங்கள் மாறிக் கொண்டிருந்தாலும் அவற்றில் அவளால் பூரணமாக ஈடுபட முடியவில்லை . மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது.



மரிய இடைவே ளையுடன் பாடசா லையிலிருந்து வீட்டுக்கு வந்து விட்டாள்.

பார்வதி திகைப்புடன் காரணத்தைக் கேட்க மகேசுவரி அழுதே விட்டாள்.

"அம்மா, நான் இனிமேல் பள்ளிக்கூடம் போகேல"

"ஏம்மா, இந்தப் பள்ளிக்கூடம் இல்லாட்டி இன்னொரு பள்ளிக்கூடம் இல் லையா?" மகேசுவரியின் த லையை ஆதரவுடன் தடவினள் பார்வதி.

"இல் லம்மா, நான் எங்கயும் போகேல. வெளியில போகவே எனக்கு விருப்பமில் லையம்மா"

பார்வதிக்கும் கண்கள் கலங்கின. நாத னை நி னைக்கையில் உடம்பெல்லாம் எரிந்தது. மனதுக்குள்ளேயே திட்டித் தீர்த்தாள்.

ஆண் து ணையின் தேவை அப்போதுதான் அவர்களுக்கு அவசியப்பட்டது. பார்வதி மறைந்த புருச னை நி னைத்துக் கலங்கினள். மடியில் படுத்து குழந்தை போல் அழும் மக ளைப் பார்த்துக் கலங்கினள்.

ஓ, இந்த பெண்கள்தான் எத்த னை கஸ்டம் அனுபவிக்கிறார்கள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்புக ளை ஆதாரமாக வைத்தே அவர்கள் அடக்கப்படுகிறார்கள். அச்சப்படுத்தப்படுகிறார்கள். அழவைக்கப்படுகிறார்கள்.

பெண் விடுத லை பற்றிய கருத்துகள் தாராளமாக எல்லோராலும் பாவிக்கப்படுகின்றன. ஆனல் இதைப் பற்றி பேச ஒரு பெண் மேடையேறிவிட்டாலோ 'வெட்கமில்லாதவள்', 'பெடியள் மாதிரி...'என்ற சிறப்புப் பட்டங்க ளைப் பெற்று விடுகிறார்கள்.

வாய் விட்டுக் கொஞ்சம் சிரித்தால், த லை நிமிர்ந்து நடந்தால், ஆண்களோடு சகஜமாகப் பழகினல்-அவள் ஒரு மாதிரி.

புது மாறுதல்க ளை இருபாலாருமே ஏற்க மறுக்கிறார்கள். விரும்பப்படவில் லை. அவையெல்லாம் மேடைப் பேச்சுகளுக்கும், கதைகளுக்கும் கருவாக அமையவே உதவின.

பாடசா லையிலிருந்து வந்த சங்கரி விசயத்தைக் கேள்விப்பட்டதும் துள்ளிக் குதித்தாள். அவளால்தான் என்ன செய்ய முடியும்?

அன்றிரவு அந்த வீட்டில் சமையல் நடக்கவில் லை.

மூன்று பெண் ஜீவன்களும் கவ லையாக இருந்தன.

•ஸ•

அடுத்த நாள் மாலை பார்வதி நாதனின் வீட்டுக்குப் போனாள்.

வீடு ஆடம்பரமாக இருந்தது. நாதனின் தாயும், தந்தையும் இருந்தார்கள். நாதன் வெளியே போயிருந்தான்.

மேலக்கு நாட்டுநடப்புகளை கதைத்துவிட்டு பார்வதி சீக்கிரமே விசயத்துக்கு வந்தாள்.

"உங்கட மகன் மனோகரிக்குத் தொல்லை குடுக்கிறான். அவள் இனி பள்ளிக்கூடம் போகேல எண்டு அழுது கொண்டிருக்கிறாள்"

"இளம் பிள்ளையள். வயசாம் அப்பிடி இப்பிடி.." நாதனின் தந்தை சிரித்தார்.

"அதுக்காக எல்லாம் ஒரளவுக்குதானே இருக்கவேணும்?"

"ரீச்சர், இதெல்லாம் இந்த சினிமாப் படங்களைப்பார்த்து பிள்ளையள் செய்யிற குளப்படிகள். படங்களில கட்டிப்பிடிச்சு ஆடிப்பாடுறதைப்பாத்திட்டு தாங்களும் அப்பிடிச் செய்யவேணுமெண்டு ஆசைப்படுகள் போல"

"அவங்களுக்கு ஆசையா இருக்கலாம். பொம்பிளையளுக்கு அரியண்டமாவாயெல்லோ இருக்கு. விருப்பமில்லாத பெட்டை எண்டு தெரிஞ்சா அவளின்ரை வழிக்கே போகாமல் இருக்க வேணும். அதை விட்டிட்டு எப்பவும் அவள் பின்னாலேயே சுத்துறதா?"

"ரீச்சர், நீங்கள் வீணாய் கோவப்படுறியள். சின்னனுகள் விளையாட்டுக்கு செய்யுறதுகளை நாங்கள் பெரிசு படுத்தக் கூடாது. நீங்கள் அலைகள் ஓய்வதில்லை படம் பாக்கேலயே?"

பார்வதி பொங்கி வரும் கோபத்தை அடக்கிக் கொண்டாள்.

'ஒரு பெண்ணின் எதிர்காலத்தைப் பாதிக்கும் பிரச்சனையைப் பற்றிக் கதைத்தால் அவர் சினிமாவைப் பற்றிக் கதைக்கிறார். அவர் மனைவியே தானும் பெண்தான் என்பதை மறந்து எந்த வித கரிசனையுமில்லாமல் தேநீர் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனாள்.'

பார்வதி ஆசிரியையாக இருந்தாலும் பெண்தான். ஒரு ஆணுக்கு முன்னால் நின்று குறிப்பிட்ட எல்லையைத் தாண்டி கதைக்க முடியவில்லை.

குமுறும் உணர்ச்சிகளுடன் அவள் வெளியே வந்து விட்டாள்.

அன்று வீட்டுக்கு வந்த நாதன் பார்வதி வந்த விசயத்தைக் கேட்டு அதிகமாக ஆத்திரப்பட்டான்.

•ஜ•

மஞ்சுகரி பாடசாலை போவதை நிறுத்தியிருந்தாள். அவ்வப்போது மாறுதலுக்காக கடைகளுக்கு மட்டும் போய் வந்தாள்.

புதிய கதை ஒன்றும் நாதனாலும், நண்பர்களாலும் பரப்பப்பட்டது.

பார்வதியின் நடத்தை சரியில்லை.

இதைச் சம்பந்தப்படுத்தி கற்பனை உப கதைகளும் அந்த ஊரில் உலா வந்தன.

பார்வதியின் ரியூசன் நிறுத்தப்பட்டது.

சங்கரியின் படிப்பும் நிறுத்தப்பட்டது.

அந்தக் குடும்பத்தைப் பற்றிய தாழ்வான அபிப்பிராயம் ஊர் எங்கும் நிலவப்பட்டது.

பல இரவுகள் அந்த மூன்று பெண்களுக்கும் நீளமாகக் கழிந்தன.

அத்தியாவசிய அலுவல்கள் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டன. மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்தவாறு வீட்டுக்குள்ளேயே வாழ்க்கை நடாத்தினர்.

எந்நேரமும் யோசனையில் இருந்தனர்.

வம்புப் பேச்சுகள், அவமரியாதைகள் இறுகி அவர்களின் வேதனை உச்சமாகியபோது பார்வதியின் தூக்க மாத்திரைகளை எல்லோருமாக பகிர்ந்து சாப்பிட்டார்கள்.

ஒருவரை ஒருவர் அணைத்து அழுதார்கள். ஒருவர் பக்கத்தில் ஒருவராகப் படுத்தார்கள்.

அதன்பின் அவர்கள் எழும்பவேயில்லை.

அவர்களின் முடிவு ஊரவர் கண்களுக்கு கோழைத்தனமான தற்கொலையே. ஆனால் ஆண் துணையே இல்லாத அந்த மூன்று அபலைகளையும் இந்த சமூகம் கொலை தான் செய்து விட்டது. அவர்களாக மரணிக்கவில்லை. நிரபராதிகளான அவர்களுக்கு சமூகத்தினால் கட்டாயமாக மரண தண்டனை விதிக்கப்பட்டுவிட்டது.

# ஒரே ஒரு ஊரிலே

(1)

மாலை வெயில். வானம் மஞ்சள் பூசியிருந்தது. மேகங்கள் நிதானமாகப் போய்க் கொண்டிருந்தன. காற்று குளிர்ச்சியாக வீசியது.

அந்தக் கொட்டிலிலிருந்து 'ரியூசன்' முடிந்து எல்லோரும் வெளியே வந்தனர். அவரவர் குடும்பத்தின் பொருளாதார நிலைமைகளுக்கேற்ப வர்ணங்களிலும், தராதரங்களிலும் வேறுபட்ட உடைகளுடன் இளைஞர், இளைஞிகள் கலகலத்து வந்தனர்.

துவிச்சக்கரவண்டியில் சிலர் முண்டியடித்துக் கொண்டோடினர்.

தோழர், தோழிகளுடன் சிலர் குழுக்களாகப் போனார்கள்.

எல்லோரும் வெளியேறினாலும் இரண்டு பேர் மட்டும் அதே இடத்தில் மரத்தின் கீழ் தரித்திருந்தனர்.

யோகன் - காஞ்சனா எனப்பட்ட அவர்களை சுருக்கமாக அறிமுகப் படுத்தினால் ஒன்றிரண்டு வயது வித்தியாசமுள்ள வாலிபனும், வாலிபியும்.

கொஞ்சம் கூடத் தெரிய வேண்டுமானால் நீண்ட நாளாக காதலித்துக் கொண்டிருப்பவர்கள்.

அவர்கள் கதைக்கும் யாவற்றையும் எழுதக் கூடாது. வெட்கமாக இருக்கும். தேவையானவற்றை மட்டும் கேட்போமே?

"வீட்ட எப்பவும் எனக்கு பேச்சு விழுகுது. உனக்கு கீழ தங்கச்சியள் இருக்கேக்க உதெல்லாம் தேவைதானோ என்டு கேக்கினம்"

"அதவும் நியாயம் தானே?"

"சீ, உங்களுக்கு எப்பவும் பகிடிதான்"

"பின்ன என்ன செய்யிறது? இந்த வயசில கலியாணம் செய்யேலுமோ?"

"வயசு பாத்தே தான் லவ் பண்ணினனீங்களே?"

"கோபப்படாதையும் காஞ்சனா. எங்கட வீட்டையும் விசயம் தெரியும். அவையளா ஏதேன் கதைக்கினமோ என்டு பாக்கத்தான் இவ்வளவு நாளும் பேசாமல் இருந்தனான். இனி நானே கதைச்சுப் பாக்கிறன்"

"சொல்லாதையுங்கோ. செய்து காட்டுங்கோ"

"அவசரப்படக் கூடாது. நேரமிருக்கு. இந்த சட்டை எப்ப தைச்சது?" இனி எல்லாம் கேட்ககூடாது.

•சூ•

"விசரா இருக்கு மச்சான். பொலிடோல் குடிக்கலாம் போல இருக்கு."

"ஏண்டா பொறன். எவ்வளவு நாளைக்கு பேய்க்காட்டுவான் எண்டு பாப்பம்"

வாசிகசாலையின் வெளிப்பக்கம் மரக் குற்றியொன்றிலிருந்து மூர்த்தியும், முருகனும் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

முருகன் குவைத் போவதற்காக கடன் வாங்கி ஏஜன்சி ஆள் ஒருவனிடம் பணத்தைக் கட்டியிருந்தான். ஏழு மாதங்களாகியும் அவனுக்கு எந்த ஒழுங்கும் செய்யப்படவில்லை. பல முறைகள் அவனிடம் போய் ஏமாற்றத்துடன் வந்து கொண்டிருந்தான்.

"காசு கடன் தந்தவை எல்லாம் நெருக்கினம். என்ன செய்யிறது எண்டு தெரியேல"

"கனக்க யோசியாதை மச்சான். எல்லாம் வடிவா நடக்கும். பிந்துறதும் நல்லதுக்குதானே தெரியுமே. இண்டையான் பேப்பர் பாத்தனியே?"

"இன்னும் இல்லை. என்ன புதினம்?"

"வவுனியாவில ஆமி வீடு வீடா போய் ஆக்களை சுட்டிருக்கிறாங்கள். பொம்பிளையளையும் கற்பழிச்சுப் போட்டாங்களாம்"

"நாங்களெல்லாம் பொறுப்பிருக்கெண்டு சொல்லிக் கொண்டு பின்னுக்கு நிக்கு மட்டும் இப்பிடி அநியாயங்கள் நடந்து கொண்டுதான் இருக்கும்."

"உண்மைதான். இப்பவும் பார். சனம் நகை, நட்டை விற்றே, சேமிச்ச காசை எடுத்தோ ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ் எண்டு போகினம். கொஞ்சம் கூடக் காசு இருக்கிறவன், பெரிய முதலாளியவெல்லாம் இந்தியா போய் சுகமா சந்தோசமா இருக்கினம்"

"உவ்வளவும் ஏன்? இப்பவும் தங்களுக்கொண்டும் நடக்கேல எண்ட நினைவில வீடியோ படம் காட்டுகினம். கலியாணம், குடிபூரல் எல்லாம் வீடியோவில எடுக்கிறதுக்காக சினிமா படங்கள் மாதிரி நல்லா காசை செலவழிச்சு கொண்டாடுகினம்"

"இப்பிடிச் சனங்கள் எல்லாம் பிரச்சனைகளிலிருந்து தங்களை விலக்கிக் கொள்ளப் பாக்கையில் எப்பிடி நல்ல முடிவு வரும்?என்னையே பார். இவ்வளவு கதைக்கிறன். ஆறு நாளும் நாட்டுக்காக ஒன்டும் செய்ய முயற்சி எடுக்கேல. எப்ப குவைத் போவேன் என்டதுதான் என்ரை முழு யோசனையும்"

"நீயாவது பறவாயில்லை. கஸ்டப்பட்டு உழைக்கத்தான் குவைத்துக்குப் போறாய். மற்றவைகள் எல்லாம் யூரோப் நாடுகளில போய் இருந்து கொண்டு தண்ணி அடிக்கிறதும், படம் பாக்கிறதுமாய் தங்களுடைய எதிர்காலத்தையே நாச-மாக்கிக் கொண்டிருக்கினம்."

மூர்த்தி முருகனுக்கு சமாதானம் சொன்னாலும் உண்மையில் தாங்களும் குற்ற-வாளிகள்தான் என்பதை புரிந்து கொண்டான்.

•൦൭•

உடுப்பில்லாததைப் பற்றிக் கவலைப்படாமல் அந்த குழந்தை மண்ணில் தவ-ழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது.

குழந்தை தன்னை பார்க்குமே என்று வெட்கப்படாமல் நாய் ஒன்று சற்று தள்ளி சிறுநீர் கழித்துக் கொண்டிருந்தது.

குடிசையின் உள்ளே வள்ளிநாயகி மரக்கறி வெட்டிக் கொண்டிருந்தாள்.

நாகலிங்கம் கோடரியை ஒரு மூலையில் வைத்துவிட்டு வாளியிலிருந்து தண்ணீரை எடுத்துக் கொண்டு வெளியே போனான். முகம், கை, கால்களைக் கழுவிய பின் மீண்-டும் உள்ளே வந்தான்.

"காசிப்பிள்ளை வீட்டை போனனியே?"வள்ளிநாயகி வெட்டிக் கொண்டே கேட்டாள்.

"ஓமோம்"அப்போது சுவருடன் சாய்ந்து கீழே குந்தினான் நாகலிங்கம்.

"என்ன சொல்லுகினம்?"

"கட்டாயம் எழும்பத்தான் வேணுமாம். கலியாணம் இன்னும் மூன்று கிழமைக்க நடக்குமாம். அதுக்குள்ள போயிடட்டாம்."

நாகலிங்கத்தின் குடிசை காசிப்பிள்ளையரின் காணியிலேயே இருந்தது. ஊரு-க்கு ஒதுக்குப் புறமாக, பற்றைக் காடாக இருந்த காணியில் சுத்தம் செய்து வளப்படுத்தி, குடிசையும் போட்டு, சிறிய குடிசைத் தோட்டமும் வைத்து நீண்ட நாட்களாக குடியிருந்தார்கள் நாகலிங்கம் குடும்பத்தினர்.



விறகு வெட்டியும், கூலி வேலை செய்தும் நாகலிங்கம் குடும்பத்தின் பசியைப் போக்க முனைந்து கொண்டிருந்தான்.

நாட்டு நிலைமைகள் காரணமாக அவனின் உழைப்பும் குறைந்து கொண்டிருந்தது.

இந்த நிலைமையில்தான் காசிப்பிள்ளை தம் மகளின் திருமணத்துக்கு அந்தக் காணித் துண்டை சீதனமாக எழுதிவிட்டதாகவும், நாகலிங்கம் அந்த இடத்தை

காலி செய்து கொடுக்க வேண்டும் என்றும் சொல்லிவிட்டார்.

நாகலிங்கத்துக்கு வேறு போக்கிடம் எதுவுமில்லை. எங்கேயாவது போய் குடிசை போட்டிருக்கலாம் என்றாலும் பாதுகாப்பான இடமாகவும், தெரிந்தவர்களின் இடமாகவும் எதுவுமில்லை.

நாகலிங்கம் எதுவும் யோசிக்கவே விரும்பவில்லை.

தனபால் துவிச்சக்கரவண்டியை சுவருடன் சாத்திவிட்டு உள்ளே போனார்.

"ஏனப்பா, இவ்வளவு நேரம்? ஆ..இதென்னகையில கட்டு?" மகன் சதீஷ் படபடத்தான்.

"என்னப்பா? என்ன நடந்தது?" சேலையில் கையைத் துடைத்துக் கொண்டு வந்த மீனாட்சியும் கேட்டாள்.

"ஒண்டுமில்லை. தபால் குடுத்துக் கொண்டு வரேக்க பலாலி றோட்டால ஆமிக்காரன் சுட்டுக் கொண்டு போனான். எல்லோரும் பதறியோடையிக்க நான் சைக்கிளோட வேலியிக்க விழுந்திட்டன். முள்ளுக் கம்பி சாடையாக கீறிப்போட்டுது. அதுதான் ஆஸ்பத்திரிக்கு போய் கட்டுப் போட்டுக் கொண்டு வாறன்"

சோர்வுடன் கதிரையில் அமர்ந்தார் தனபால்.

"பொல்லாத வேலை. உசிரைக் குடுத்து செய்ய வேணுமாக்கும். அவனவன் எல்லாம் பயந்து வீட்டுக்க பதுங்கி இருக்கிறான்கள். இவருக்கு மட்டும் கடமை உணர்ச்சி போல"

மீனாட்சி முணுமுணுத்துக் கொண்டே சுடச்சுட கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள்.

"கடமை உணர்ச்சி இல்லை. வயிற்றுப் பசிக்குத்தான் போறேன்"

"அப்பிடி என்ன அவசியம்? மீன்கார மாணிக்கம் இண்டைக்கு வந்தவன். ஏன்ராப்பா கன நாளா மீன் கொண்டு வரேல என்டு கேட்டன். உங்களுக்கென்னம்மா, மீன் இல்லையெண்டு கவலைப்படுவியள். கடலுக்குப் போறவனே உசிரில்லாமல் கரைக்கு வாறான். முந்தியெல்லாம் தொழிலுக்குப் போகேக்க காத்துக்கும், மழைக்கும் தான் பயப்பிட்டோம். இப்ப சாவுக்கு பிடிச்சிருக்கிற மனிசரிட்ட இருந்து தப்பிறதே

பெரிய காரியம். கடலுக்குப் போய் காசு உழைக்காட்டியும் பறவாயில்லை. குழந்தை, குட்டிகளோட இருக்கிறதைக் கொண்டு சாப்பிடுவோம் என்டு சொல்லுறன்"

மீனாட்சி மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள்.

"எல்லாரையாலும் அப்பிடி இருக்கேலுமே? நாங்க வேணுமென்டா சாப்பிடாம இருக்கலாம். பிள்ளையளைப் பட்டினி போட மனம் வருமே? காசில்லாமல் படிக்கேலுமே?"

மீனாட்சியால் இதற்கு பதில் சொல்ல முடியவில்லை.

"மீனாட்சி, முனிச்சலாய் சின்னப் பெடியள் எல்லாம் துவக்கெடுத்துக் கொண்டு போய் சண்டை பிடிச்சு சாகிறான்கள். என்னால அப்பிடி எல்லாம் செய்யேலாது. அதுக்காக ஒன்டுமே செய்யாமல் எனக்காக மட்டும் வாழுறது சரியா? எத்தினை பேர் வெளியூரில, வெளிநாட்டில இருந்து கொண்டு தங்கட உறவுகளுக்கு என்ன நடந்துதோ என்டு யோசிச்சுக் கொண்டிருப்பினம். வீட்டில இருந்து கடிதத்தை காணாமல் சாப்பிடாமல் இருக்கிற சனங்களும் இருக்குதுகள். இந்த நிலையில நான் பாக்கிற இந்த உத்தியோகம் என்னால் செய்ய முடிஞ்ச சிறு உதவிதான்."

தனபாலின் முகத்தில் பெருமிதம் இருந்தது.

மீனாட்சி இதன்பின் எதுவும் கதைக்கவில்லை.

(2)

காஞ்சனாவின் தந்தை சிவபாதம் சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்தார்.

சற்றுத் தள்ளி தாயார் நிலத்தில் காலை மடித்து உட்கார்ந்திருந்தாள்.

காஞ்சனாவின் அண்ணா, தம்பி, தங்கைகள் எதுவும் பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

காஞ்சனா அறையினுள்ளே தனியாக கட்டிலில் படுத்து அழுது கொண்டிருந்தாள்.

"பெரிய கெட்டித்தனம் மாதிரி லவ் பண்ணிப் போட்டா." சிவபாதம் கொஞ்சம் பலமாகவே கதைத்தார்.

யாரும் இடையில் கதைக்கவில்லை.

"லவ் பண்ணயிக்க ஒன்டையும் யோசியாதையுங்கோ. இப்ப அவங்கள் நகையை கொண்டா, வீட்டைக் கொண்டா என்டு நிக்கிறங்கள். வீட்ட எழுதிப் போட்டு நாங்கள் ரோட்டிலயே நிக்கிறது?"

குறுக்கே யாரும் கதைக்கவில்லை.

"படிக்கிற வயசில அவைக்கொரு கலியாணம். உவையை படிக்க அனுப்பினதோ மாப்பிளை பாக்க அனுப்பினதோ?"

"............"

"ஊர் முழுக்க விசயம் தெரியும். அவளோட நின்டு சுத்தினதை, அலம்பினதை எல்லாம். அவளை விட்டால் இனி ஆர் கட்டப் போறாங்கள்? தவக்கு கீழ இருக்கிறதுகளை ஆவது யோசிச்சால் இப்பிடி நடந்திருப்பாளே?"

"....... .."

"கண்டறியாத காதல் ஒன்டு. ஆக்களையோ, காசையோ காதலிக்கினம்? முதல் நீதான் வேணும் என்னுவினம். பிறகு வீடு, நகை நட்டில்லாட்டி நீ வேண்டாம் என்னுவினம். சுய புத்தி இருந்தாதானே?"

"..........."

"மூத்தவன் உழைக்கிறதிலேயே மூன்டு நேரமும் சாப்பிடுறதுக்கு கஸ்டமாய் இருக்கு. அவனும் ஒரு பாவி. சவக்குச் சத்தம் கேட்டா என்ன கேக்காட்டி என்ன ஒழுங்கா வேலைக்குப் போய் வாறான்."

சிவபாதம் தனி ஆவர்த்தனம் வாசிக்க, மற்றவர்கள் கேட்டு மனதுக்குள் அனுபவிக்க காஞ்சனா மட்டும் அழுது கொண்டிருந்தாள்.

•ஃ•

"என்ன நோட்டீஸ் ஒட்டுறாங்கள்?"

மூர்த்தி கடைச் சுவரில் ஒட்டப்பட்டிருக்கும் நோட்டீசைக் காட்டிக் கேட்டான்.

முருகன் அந்தக் கடை வழியாகத் தான் வந்திருந்தான்.

"கோயில் திருவிழாவாம்" முருகன் சொன்னான்.

"ஓமோம், நிச்சயம் தேவைதான். எங்கட பிரச்சனைகளுக்காண்டி சுவாமி தானே பேச்சு வார்த்தை நடாத்தினார்."

"போடா, கடவுளைப் பற்றி இப்பிடி விமர்சிக்காதை"

"உண்மைதான். ஏனெண்டா அகதியளுக்கு கஞ்சி ஊத்திறதே அவர்தானே? அவரவர் சாப்பிடவோ, ஏன் உயிரோட இருக்கவே வழி இல்லை. இந்த நேரத்தில கோயிலோ திருவிழாவோ அவசியமா?"

"எல்லாருக்கும் ஏதோ ஒண்டில் நம்பிக்கை இருக்கத்தான் வேணும். உன்ரை அப்பா, அம்மாவில உனக்கு நம்பிக்கை. உனக்குள்ள நம்பிக்கை போலத்தான் மற்றவைக்கும் கடவுளில நம்பிக்கை. உனக்கு நம்பிக்கை இல்லாட்டி அதோட விட்டிரு. ஆனா நக்கல் அடிக்காதை. இப்பவும் பார். கோயிலிலதான் அகதியள் இருக்கினமாம்"

"கோவிக்காதை மச்சான். சாப்பாட்டுக் கஸ்டத்தில சனங்கள் இருக்கேக்க சுவாமிக்கு அபிசேகம் செய்யிறதும், ஆடம்பரமாய் விழாக்கள் வைக்கிறதும் தான் எனக்குப் பிடிக்கேல."

"உண்மைதான். சனம் இதை உணரேல. கண்மூடித்தனமான பக்தியை விட பேரெடுக்கிறதுதான் இவையின்ர நோக்கம். இப்பவும் காணி வேண்டுறவையும், வீடு கட்டுறவையும் இருக்கத்தான் செய்யினம். அவைக்கு நிலமையளை விளக்குறதே கஸ்டம். தங்களுக்கொண்டும் நடக்காது, தப்பியிருவோம் எண்டு நினைக்கினம்"

"ரமேசின்ரை தங்கச்சி காஞ்சனாவும், யோகனும் லவ் பண்ணினது தெரியும் தானே? யோகன் இப்ப காஞ்சனாவைக் கட்டுறது எண்டா வீட்டை எழுதித் தரவேணுமெண்டு ஒற்றைக் காலில நிக்கிறானாம்."

"இண்டைக்கோ, நாளைக்கோ ஆமிக்காரன்ரை கண்ணில இந்த ஊர் பட்டால் எல்லாம் சரி. அவனுக்கு வீடு வேணுமாமோ?"

"இன்னொரு விசயம் கேள்விப்பட்டனியே? காசிப்பிள்ளையர் நாகலிங்கத்தை எழும்பச் சொல்லியிருக்கிறாராம். அவன் எங்கையெண்டு போவான்?"

"எத்தினை தலை முறை போனாலும் இவங்களைப் போல ஆக்களின்ரை குணம் மாறாது. தங்களை மாத்தவும் விரும்பிறயில்லை. நெருப்பெரியேக்க நீரோ மன்னன் பிடில் வாசிச்ச மாதிரி நாளுக்கு நாள் சனம் அழிஞ்சாலும் காசாசை, நாட்டாண்மை, சீதனம், சாதி இதுகளுக்கு அழிவேயில்லை. இதுகளுக்கெல்லாம் எப்ப சாவு மணி அடிக்கப்படுகுதோ அப்பதான் எங்களுக்கெல்லாம் உண்மையான விடுதலை."

"பேனையை மட்டும் வைச்சுக் கொண்டு எல்லாத்தையும் பேப்பரில நிரப்பி விளம்பரமா எழுதிப் போடுவினம். இதில வேலையில்லை மச்சான். எல்லாரும் தான் தான் உணர்ந்து திருந்த வேணும். மாற வேணும்."

"இதுகளைக் கதைக்கப் போனால் எங்களுக்குத்தான் விசர் பட்டம் கிடைக்கும். நீ முதல் உன்னைத் திருத்து. பிறகு எங்களைப் பற்றி யோசிப்போம் என்னுவங்கள்"

"கதைச்சுக் கொண்டு நிண்டதிலேயே நேரம் போட்டுது. நான் கடைக்குப் போக வேணும். வரட்டே"

முருகன் விடை பெற்றுப் போனான்.

மூர்த்தி கொஞ்ச நேரம் தெருவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

தண்ணீரை வயிறு முட்டக் குடித்துவிட்டு நாகலிங்கம் குடிசையின் வெளியே வந்து குந்தில் அமர்ந்தான்.

கொஞ்ச நேரத்தில் வள்ளிநாயகியும் வந்து பக்கத்தில் அமர்ந்தாள்.

சிறிது நேரம் இருவரும் கதைக்கவில்லை.

வானத்தில் மேகக்கூட்டம் அதிகமில்லை. கொஞ்சப் பறவைகள் ஒரே திசை- யாகப் பறந்து போயின.

"பிள்ளைக்கேதேனும் குடுத்தனியே?" நாகலிங்கம் மௌனத்தைக் கலைத்தான்.

"என்னத்தைக் குடுக்கிறது. பாணைத்தான் தேத்தண்ணியில நனைச்சுக் குடுத்தனான்."

நீ சாப்பிட்டியா என்று நாகலிங்கம் வள்ளிநாயகியைக் கேட்கவில்லை. அவனுக்குத் தெரியும் சாப்பிட அங்கு எதுவுமில்லை என்று.

"ஒருதனும் வேலைக்கு கூப்பிடுறேல்லை. அவங்களையும் குற்றம் சொல்லேலாது. இப்பத்தை நிலைமையில கூலி தாற மாதிரி ஆரும் இல்லை. எல்லாம் எங்கட தலைவிதி."

வள்ளிநாயகி எதுவும் பேசாமல் குச்சி ஒன்றை கையில் எடுத்து மண்ணில் கீறிக் கொண்டிருந்தாள்.

"காசிப்பிள்ளை ஒவ்வொரு நாளும் கரைச்சல் படுத்துறார். எல்லாருமா மருந்து குடிச்சு சாகலாம் எண்டா அதுக்கு கூட வழியில்லை."

நாகலிங்கத்தின் குரல் கரகரத்தது.

வள்ளிநாயகி இப்போதும் தலை குனிந்து கீறிக் கொண்டிருந்தாள். மண் தரை- யில் கண்ணீர் துளி ஒன்று விழுந்தது.

தனபால் வீட்டில் எல்லோரும் பரபரப்பாயிருந்தார்கள்.

மீனாட்சி அழுது கொண்டிருந்தாள்.

"ஐயோ, என்ன நடந்ததோ? இந்த வேலை வேண்டாம் வேண்டாம் என்டு சொன்னனான். மருசன் கேக்கேலயே"

"சீ, கத்தாதை அம்மா. அப்பாவை என்ன ஆமிக்காரன் பிடிச்சுக் கொண்டு போட்டானே? அவர் இன்னும் வரேல. அவ்வளவு தானே? உதுக்கேன் ஒப்பாரி வைக்கிறாய்? அண்ணை தேடிக்கொண்டு போனவர்தானே." மகள் தாயை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள்.

வழக்கமாக பகல் மூன்று மணிக்கெல்லாம் வந்து விடும் தனபால் அன்று ஆறு மணியாகியும் வரவே இல்லை.

நேரம் போய்க் கொண்டிருந்தது.

எல்லோரும் பயப்படத் தொடங்கினார்கள்.

மீனாட்சி பெரிதாகவே அழத் தொடங்கிவிட்டாள்.

அயலவர்களும் கூடத் தொடங்கினார்கள்.

இரவு ஒன்பது மணியளவில், அந்த வீட்டின் உழைப்பாளி, மக்களுக்காக தபால் சேவையை சேவையாகச் செய்த, அன்று பகல் இராணுவத்தால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட தனபாலின் உடல் வீட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

(3)

ஒரு மாலைப் பொழுது.

நான்கு மணியிருக்கலாம்.

ஊரவர் தத்தமது வழமையான கடமைகளில் இருந்தனர்.

கிடைத்த தகவல் ஒன்றையடுத்து இராணுவம் அந்த ஊரைச் சுற்றி வளைத்தது.

வீடுகள் கொழுத்தப் பட்டன.

பச்சிளம் குழந்தை முதல் படு கிழம் வரை உயிர்கள் வலுக்கட்டாயமாக பறிக்கப்பட்டன.

உடமைகள் சூறையாடப்பட்டன.

பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

கொஞ்ச நேரத்திலேயே கொழுந்து விட்டெரியும் நெருப்பில், ஈனமான அழுகை ஒலங்களுடன் அந்த ஊரில் அவரவருக்கிருந்த பிரச்சனைகளுக்கு சுமுகமான முடிவு காணப்பட்டுக் கொண்டிருந்தது.

# உயரப் பறக்கும் பறவைகள்

மேற்கு ஜேர்மனியில் ஒரு நகரம்.

பஸ், கார், வீடுகள், ஜனங்கள் என்று சந்தடியாக இருந்தது.

மாலை மூன்று மணியாக இருந்தாலும் இருளாக இருந்தது. பனி மழை இலேசாக கொட்டிக் கொண்டிருந்தது.

மாதவன் கையில் சிறிய பையொன்றை தூக்கிக் கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தான்.

பாதையிலிருந்த பனிக்கட்டிகளில் அவன் தடுக்கி தடுமாறும் போது பைக்குள்ளிருந்த போத்தல்கள் தமக்குள் மோதி சத்தம் போட்டன.

பெரிய வாகனம் ஒன்று பாதையை துப்பரவு செய்து கொண்டிருந்தது.

மாதவன் தனது வசிப்பிடக் கட்டட கதவை திறந்து கொண்டு உள்ளே போனான்.

பருப்புக்கறி மணம் எங்கும் பரவியிருந்தது.

அது ஒரு நான்கு மாடிக் கட்டடம். நான்கு மாடியிலும் இலங்கையிலிருந்து வந்த தமிழர்கள் – அகதிகள் – குடியிருந்தார்கள்.

சுற்றிலும் ஜேர்மனியர்கள் இருந்தார்கள்.

மாதவனின் அறை உச்சியிலிருந்தது.

மாதவன் தனது அறைக் கதவை திறந்து உள்ளே போனான்.

அவனைக் கண்டதும் உள்ளே இருந்தவர்கள் "போத்தல் வந்திட்டுது" என்று சத்தம் போட்டார்கள்.

பையிலிருந்த போத்தல்கள் எடுக்கப்பட்டு மூடிகள் திறக்கப் பட்டன.

எல்லோரும் தமக்கென ஒவ்வொன்றை எடுத்துக் கொண்டனர்.

மாதவன் போத்தலுடன் பொரியலும் கொஞ்சம் எடுத்துக் கொறித்துக் கொண்டு கதிரை ஒன்றில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான்.

அந்தப் பகுதியிலிருந்த இரண்டு அறைகளிலும் நான்கு நான்கு பேராக எட்டுப் பேர் வாசம் செய்தார்கள்.

எட்டுப்பேருக்கும் பொதுவாக ஒரேஒரு குளியலறையும், ஒரேஒரு சமையலறையும்.

அங்கிருப்பவர்களைப் பற்றிய அறிமுகம்.

முதல் அறையில்—

மாதவன்—படித்துவிட்டு வேலை எதுவும் இல்லாதிருக்க பெற்றோரால் இங்கு அனுப்பப்பட்டவன்.

சங்கரன்—படித்துக் கொண்டிருக்கும் போது தீவிரவாதிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயல அச்சம் கொண்ட குடும்பத்தவரால் வழி அனுப்பி வைக்கப்பட்டவன்.

வேதநாயகம்—அரசாங்க ஊழியராக வேலை செய்து கலவரத்தின் போது வேலையை இழந்து குடும்ப நிலை காரணமாக வந்தவர்.

ஜீவன்—எல்லோரும் வெளிநாடு போகிறார்களேயென்று தானும் புறப்பட்டு வந்த பணக்காரப்பிள்ளை.

இரண்டாவது அறையில்—

தவராசா—குடும்ப கஸ்டத்தால் உழைக்கலாம் என்று வந்தவன்.

ராஜலிங்கம்—இராணுவ முகாம் பக்கத்தில் என்பதால் தனது வயதை எண்ணி பார்த்து பயந்து வந்தவன்.

ரவி—அண்ணன் தீவிரவாதி என்பதால் தனக்கும் இராணுவத்தால் ஆபத்து ஏற்படலாம் என்று வந்தவன்.

சேகர்—கலவரத்தின் போது வீடு, பெற்றோர் எல்லாம் இழந்தவன்.

இவர்கள் அத்தனை பேரும் இலங்கையில் வெவ்வேறிடங்களில் வசித்திருந்தாலும் வெவ்வேறு துறைகளில், தராதரங்களிலிருந்தாலும், வேறுபட்ட வயதினராக இருந்தாலும் அந்நிய நாட்டுச்சூழலாலும், மதுவினாலும் ஐக்கியமாகிப் போனார்கள்.

கவலைக்காக, எதுவுமே இல்லையென்பதற்காக, வாழ்க்கை மேல் உள்ள வெறுப்புக்காக, பொறுப்பில்லாததற்காக, நாகரிகத்திற்காக குடித்தார்கள்.

"சிலோனில பிரச்சினை என்னவாம்?"சங்கரன் பொரிய லைக் கடித்தபடி கேட்டான்.

"முந்தாநாள் பிளேற்றிலயிருந்து தாக்கியிருக்கிறாங்களாம்;இதுதான் லேட்டஸ் நியூஸ்"சேகர் சொன்னான்.

"உதைவிடு மச்சான்.நாங்கள் இங்க இருந்து கதைச்சு என்ன பிரயோ-சனம்?சாகிற சனம் சாகட்டும்."ஜீவன் சொல்லிக் கொண்டே இன்னொரு மிடர் விட்டுக் கொண்டான்.

"புதிசா என்ன படம் வந்திருக்கு?"அவன் தான் தொடர்ந்து கேட்டான்

"விஜயகாந்திர்ரை ஒன்டு வந்திருக்கு.ரேவதியும் நடிக்கிறாளாம்"சங்கரன் சொன்னான்.

"ரேவதியுமோ?அப்ப ரொப்பா இருக்கும்" ஜீவன் அடுத்த மிடறும் விட்டுக் கொண்டான்.

தாய் நாட்டில் நடைபெறும் பிரச்சனைகளின் மூல காரணமாக இங்கே வந்-தவர்கள் நாட்கள் போகப்போக அந்தப் பிரச்சனைகளிலிருந்து விலகிப் போனா-ர்கள்.

பிரச்சனைகள் எல்லாம் வெறும் செய்திகள் ஆகின.அவற்றை விட முக்கியமா-னவை,மனதைக் கவர்ந்தவை அவர்களுக்கு ஏராளம் இருந்தன.

மது,சினிமா,டிஸ்கோ.....என்று அவர்கள் வேறு உலகத்துக்குப் போய்-விட்டார்கள்.

குடித்து முடித்தபின் அந்தப்படியே எல்லோரும் படுத்து விட்டார்கள்.இனி அவர்களின் அடுத்த பிரச்சனை இரவுச் சாப்பாடு தான்.அதுவரை அவர்கள் நிம்-மதியாக இருக்கலாம்.

தவராசா மட்டும் நித்திரை கொள்ளவில்லை.அவன் மனம் உறங்கவில்லை. வீட்டின் கஷ்டங்கள் குடி போதையிலும் நிழலாடின.

தகப்பனில்லாத குடும்பம்.மூத்த அண்ணன் தோட்டம்.இரண்டாவமன் தவராசா. கடையில் வேலை செய்து வந்தவன் கலவரத்தில் போது கடை எரிக்கப்பட தொ-ழிலை இழந்தான்.

அவன் பின்னால் இரண்டு தங்கைகள் படித்துக் கொண்டிருந்தார்கள்.

இவ்வளவு பேருக்கும் சாப்பாடு போட்டது ருத்தலனின் தோட்டமும், இடை-யிடையே கூலி வேலை செய்யும் தாயின் பணமுமே.

வெளிநாடு போனால் கஷ்டம் தீரலாம் என்று சவுதி ஏஜன்சிக்கு காசு கட்-டினான். அவன் காலவரையறையின்றி ஏமாற்றவே காசை வாங்கி ஜேர்மனிக்கு வந்து விட்டான்.

இலங்கை அகதிகளை ஏற்றுக் கொண்ட ஜேர்மன் அரசாங்கம் அவர்கள் மீது இரண்டு கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

குடியமர்த்தப்பட்ட நகரத்தில் இருந்து மற்றைய நகரங்களுக்குப் போக கூடாதென்பது ஒன்று.

மற்றையது குறிப்பிட்ட காலத்துக்கு முன்போ, நிரந்தரமாகவோ வேலை கூடாதென்பது.

கஷ்டத்தின் மத்தியில் காணியை ஈடுவைத்து எடுத்த காசை உழைத்து அனுப்ப வேண்டும் என்று சட்ட விரோதமாகவும் வேலை தேடினான். வருடங்கள் இரண்டு போயும் அவனால் வேலையைப் பெற முடியவில்லை.

வீட்டிலிருந்தோ நாளுக்கு நாள் கூடும் கஷ்டங்களைப் பற்றி பட்டும்படாமலும் கடிதங்கள் வந்தன.

தவராசாவால் எதுவும் செய்ய முடியவில்லை. அகதிகளுக்கான உதவிப் பணத்தில் மிச்சம் பிடித்து அனுப்பிக் கொண்டிருந்தான்.

எல்லாவற்றிற்கும் முடிவாக அண்ணனின் அகால மரணச் செய்தியும், மற்றவர்-கள் அகதி முகாமுக்கு போன செய்தியும் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன.

அன்றிலிருந்து தவராசா குடிக்கத் தொடங்கினான்.

நாளுக்கு நாள் போத்தல்களின் எண்ணிக்கையைக் கூட்டினான்.

அவ்வப்போது குடும்பத்தவரை நினைத்து வாய் விட்டு அழுவான்.

"இரவு சாப்பாடு என்ன செய்வோம்?"வேதநாயகம் கேட்டார். அவர்தான் அங்கிருப்பவர்களிலேயே வயது முதிர்ந்தவரும், திருமணமானவரும்.

"றொட்டி சுடுவோம்"சேகர் சொன்னான். அவனுடைய கலை அது.

எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ள இரவுச் சாப்பாட்டுக்கான ஆயத்தங்கள் ஆரம்பமாகின.

சேகர் மாவோடு சண்டை பிடிக்கத் தொடங்கினான்.

ரவி உயிரில்லாக் கோழியை கூறு போட்டுக் கொண்டிருந்தான்.

ஜீவன் ஒலிப்பதிவு சாதனத்தில் ஆங்கிலப்பாடல் ஒன்றைக் கதற விட்டு ஆடிக் கொண்டிருந்தான்.

நாடு மாறினாலும் அவன் பணக்காரத்தனம் மாறவில்லை. மற்றவர்களை அதிகாரம் பண்ணுவான். குடியை விட நினைப்பவர்களை மீண்டும் தொடரத் தூண்டி விடுவான்.

அவனுடைய கனவெல்லாம் எப்போதும் உல்லாசமாக இருக்கவேண்டுமென்பதே.

வெட்டித் தரப்பட்ட இறைச்சியில் வேதநாயகம் கறி வைக்கத் தொடங்கினார். கறியை சுவையாக வைப்பதில் அவர் கெட்டிக்காரர்.

அரசாங்க உத்தியோகம் பார்த்துக் கொண்டு குடும்பத்துடன் நிம்மதியாக இருந்தவரின்வாழ்வை நாட்டின் பிரச்சனைகள் பாதித்தன.

கலவரத்தால் இடம்மாறி சொந்த ஊருக்கு வந்தவரை மனைவி, பிள்ளைகள் மீண்டும் பழைய இடத்துக்குச் சென்று வேலை பார்க்க அனுமதிக்காததால் வேலை இழந்தவர்களின் பட்டியலில் அவரும் சேர்ந்து கொண்டார்.

தனது தகமைகளுக்கேற்ப ஏதாவது வேலை கிடைக்காதா என்ற நப்பாசையுடன் வந்தவருக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது.

காலப்போக்கில் தன்னிலும் வயது குறைந்தவர்களுடன் சம வயது தோழனாக மாறி மதுவில் நிம்மதி பெற்றார்.

ரொட்டி, கறி இரண்டும் தயாரானவுடன் எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டார்கள்.

அன்றைய பொழுது போய்க் கொண்டிருந்தது.

சாப்பாட்டு வகைகளில், பார்க்கும் திரைப்படங்களில் வித்தியாசம் இருந்ததே தவிர அவர்களுடைய அன்றாட அலுவல்களில், பொழுதுகளில் எந்த வித மாற்றமும் இருக்கவில்லை.

சமைத்தார்கள். சாப்பிட்டார்கள். குடித்தார்கள். சண்டை பிடித்தார்கள். படம் பார்த்தார்கள். பாட்டுக் கேட்டார்கள். படுத்தார்கள்.

ஏதாவது மாறுதல் இருக்க வேண்டுமே என்பதற்காக தமக்குள்ளேயே ஒரு-வருக்கொருவர் அடிபட்டுக் கொண்டார்கள்.

பொருட்களை பாழாக்கினார்கள்.

பெரிய சத்தமாக பாட்டுப் போட்டுக் கேட்டார்கள்.

எல்லா வகைகளிலும் சாதாரண மனிதர்களிலிருந்து வித்தியாசப் பட்டார்கள்.

படம் ஓடிக் கொண்டிருக்கையில் விமர்சனங்கள் வெளியிடப் பட்டுக் கொண்டி-ருந்தன.

"அவள் திறமாச் செய்யிறாள்"

"இவள் சரியான செக்ஸி"

"அருமையான பாட்டு"

அவர்களில் யாருக்குமே வேறெங்கும் சிந்தனை போகவில்லை.

தினம் தினம் துடிபட்டு சாகும் நாட்டில் இருக்கும் தமிழர்களின் பரிதாபம் தெரியவில்லை. படத்தில் கதாநாயகனுக்கு கான்சர் என்று கவலைப்பட்டார்கள்.

இராணுவத்தினரால் கற்பழிக்கப்படும் தமிழ் பெண்களின் அவலம் தெரியவில்லை. படத்தில் வரும் கற்பழிப்புக் காட்சியை படு செக்ஸி என்று ரசித்தார்கள்.

எதிரியுடன் போரிட்டு வீர மரணம் எய்தும் புரட்சி இளிஞர்களின் தியாகமும், வலியும் புரியவில்லை. படத்தில் கதாநாயகன் காற்றிலே பறந்து பறந்து பதினைந்து வில்லனின் கையாட்களை அடித்து நொருக்குவதை பார்த்து ஆகா என்றார்கள்.

அவர்கள் எவருக்கும் எதிர்காலத்தைப் பற்றிய கவலை இருக்கவில்லை. தாங்-கள் இருக்கும் சூழலும், வசதிகளும் நிரந்தரமென நினைத்துக் கொண்டார்கள். சிலர் நினைக்க வேண்டியவர்களானார்கள்.

மொத்தத்தில் இந்த உல்லாசப் பறவைகளுக்கு தாங்கள் கீழே இறங்க வேண்டி வரும் என்பது மறந்து போய் விட்டது.

•൦൭•

---

கதைகளில் இடம் பெற்றுள்ள பெயர்கள் யாவும் கற்பனையே.
03.1986ல் வெளியிடப்பட்ட நிஜங்கள் கையெழுத்துப் பிரதியின் மறு பதிப்பாக 01.1987ல் இவ் வெளியீடு வெளியிடப்படுகிறது.



R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

## அடுத்த வெளியீடு....

# ஜனனம்

நாட்டை நேசிக்கையில்
உரிமையை நாடுகையில்
சுதந்திரத்தை விரும்புகையில்
அடக்குமுறைகளை,
அநியாயங்களை எதிர்க்கையில்
புரட்சி ஜனனம் ஆகிறது.